## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்
## அசல் வழக்கு எண். 146/2021

**2023–ம் ஆண்டு மார்ச் மாதம் 08 ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : சிதம்பரம் | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : நன்னை | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 46/2023 |

**2 மற்றும் 3 –ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் 2 மற்றும் 3–ம் பிரதிவாதிகளோடு சம்பந்தப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி ஆவணம் 1–ம் பிரதிவாதி அவருடைய மகன்களுக்காக எழுதி கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதிக்கு வயது 60 இருக்கும். பொதுவாக ஒரு வழக்கு நிலுவையில் இருக்கும்போது பத்திரங்கள் எதுவும் பதிவு செய்ய மாட்டார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதற்கும் எனக்கு உரிமையானது என்பதற்கும் மேற்படி ஆவணங்களை தவிர வேறு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்த அனுபவமும் உரிமையும் இல்லை என்றாலும் நான் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எந்த உரிமையையும் காண்பிக்காது என்று சொன்னால் சரியல்ல.
2) இவ்வழக்கு சொத்து எனக்கு உரிமை இல்லை என்றாலும் அதற்கான ஆவணங்கள் எதுவும் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif–cum–Judicial Magistrate,
Kunnam.